www.Padasalai.Net www.TrbTnpsc.com

Tsi7T

08-04-25

# தென்காசி மாவட்டம்

## தொகுத்தறித் தேர்வு - 2025

-----

### வகுப்பு 7

### தமிழ்

கால அளவு: 2.00 மணிநேரம் மதிப்பெண்கள்: 60

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.** **5×1=5**

1) மாரி + ஒன்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் .............
அ) மாரியொன்று ஆ) மாரிஒன்று இ) மாரியின்று ஈ) மாரியன்று

2) திருநெல்வேலி ........... ஆற்றின் கரையில் அமைந்துள்ளது
அ) காவிரி ஆ) வைகை இ) தென்பெண்ணை ஈ) தாமிரபரணி

3) 'ஞானச்சுடர்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .......
அ) ஞான + சுடர் ஆ) ஞானச் + சுடர் இ) ஞானம் + சுடர் ஈ) ஞானி + சுடர்

4) செல்வத்தின் பயன் ............. வாழ்வு
அ) ஆடம்பர ஆ) நீண்ட இ) ஒப்புரவு ஈ) நோயற்ற

5) கூடு கட்டத் தெரியாத பறவை ..........
அ) காக்கை ஆ) குயில்
இ) சிட்டுக்குருவி ஈ) தூக்கணாங் குருவி

**ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக** **3×1=3**

6) உழவர் சேற்று வயலில் ......... நடுவர்

7) இளமை என்னும் சொல்லின் எதிர்ச்சொல் .........

8) காயிதே மில்லத் தமிழ்மொழியை ஆட்சிமொழியாக்க வேண்டும் என்று பேசிய இடம் .......

**இ) சொற்றொடரில் அமைத்து எழுதுக** **2×1=2**

9) கடமைகள்

10) சிந்தித்து

**ஈ) பொருத்துக** **5×1=5**

11) திரிகூடமலை - முத்துக் குளித்தல்

12) தரணி - குற்றாலம்

13) தண்பொருநை - அமைதி

14) கொற்கை - உலகம்

15) சாந்தம் - தாமிரபரணி

**உ) எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி** **4×2=8**

16) பாரி மகளிரின் பெயர்களை எழுதுக

17) தாமிரபரணி ஆற்றின் கிளை ஆறுகள் யாவை?

18) பொய்கையாழ்வார் எதற்காகப் பாமாலை சூட்டுகிறார்?

19) ஒரு நாட்டிற்கு எவையெல்லாம் அரண்களாக அமையும்?

20) உலகம் நிலை தடுமாறக் காரணம் என்ன?

21) காக்கை ஏன் குயில் குஞ்சைப் போகச் சொன்னது?

**ஊ) பின்வரும் மனப்பாடப் பாடலை அடிபிறழாமல் எழுதுக** **4+2=6**

22) 'வையம்' - எனத் தொடங்கும் புதுமை விளக்கு பாடலை எழுதுக

23) 'பிறப்பொக்கும்' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



எ) ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி 3×3=9

24) உழவுத் தொழிலின் நிகழ்வுகளை வரிசைப்படுத்தி எழுதுக

25) இளம் வயதிலே செய்ய வேண்டிய செயல்களாக முனைப்பாடியார் கூறுவன யாவை?

26) ஊருணியையும், மரத்தையும் எடுத்துக்காட்டிக் குன்றக்குடி அடிகளார் கூறும் செய்திகள் யாவை?

27) எல்லா மக்களும் ஒற்றுமையாக வாழ என்ன செய்ய வேண்டும்?

28) ஆட்சிமொழி பற்றிய காயிதே மில்லத்தின் கருத்தை விளக்குக.

ஏ) ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி. 2×2=4

29) உவமை, உவமேயம், உவம உருபு விளக்குக

30) உருவக அணிக்கும், ஏகதேச உருவக அணிக்கும் உள்ள வேறுபாடு யாது?

31) இரட்டைக் கிளவி என்பது யாது? சான்று தருக.

ஐ) கீழ்க்காணும் கட்டுரை வினாக்களுக்கு ஒருபக்க அளவில் விடையளிக்க. 2×5=10

32) டி.கே.சி குறிப்பிடும் திருநெல்வேலி கவிஞர்கள் குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுக

**(அல்லது)**

33) 'உண்மை ஒலி' படக்கதையைக் கதையாகச் சுருக்கிய எழுதுக

34) 'என்னைக் கவர்ந்த நூல்' - என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

**(அல்லது)**

35) உன் ஊரில் நடைபெறும் திருவிழாவைக் காணவருமாறு அழைப்பு விடுத்து உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக

ஒ) பின்வரும் அனைத்து மொழிப்பயிற்சி வினாக்களுக்கும் விடையளிக்க. 4×2=8

36) **தொடருக்குப் பொருத்தமான உவமையை எடுத்துக எழுதுக**

அ) நானும், என் தோழியும் ............. இணைந்து இருப்போம். (இஞ்சி தின்ற குரங்கு போல/நகமும் சதையும் போல)

ஆ) திருவள்ளுவரின் புகழை ............ உலகமே அறிந்துள்ளது (எலியும்பூனையும் போல/உள்ளங்கை நெல்லிக்கனி போல)

37) **சரியான வினாச்சொல்லை இட்டு எழுதுக**

அ) நெல்லையப்பர் கோவில் .......... உள்ளது?

ஆ) அறநெறிச்சாரம் பாடலை எழுதியவர் ...........?

38) **அடைப்புக் குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ள சொற்களில் இருந்து சரியான இணைப்புச் சொல்லை எடுத்து எழுதுக.**

(மேலும், ஆகையால், இல்லையென்றால், ஏனெனில்)

அ) குயிலுக்குக் கூடு கட்டத் தெரியாது .......... காக்கையின் கூட்டில் முட்டையிடும்

ஆ) அதிக அளவில் மரங்களை வளர்ப்போம் ............ மரங்கள் தான் மழைக்கு அடிப்படை

39) **தமிழ்க் கலைச்சொல் எழுதுக**

அ) Religion

ஆ) Ambition

இவக்கொர் மு,
ஸ்ரீராம் மெட்ரிக் மேநிப,
வல்லம்-627809
---தென்காசி மாவட்டம்.

www.Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com